பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 04 2025 7 15

தலைப்புச் செய்திகள் -

1. இந்தியா — சிலி இடையேயான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இந்தியா ஆர்வம் கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி 2029-ஆம் ஆண்டுக்குள் 50 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.
3. விமான உதிரி பாகங்கள் பாதுகாப்பு மசோதா இன்று மாநிலங்களவையில் நிறைவேறியது.
4. ஆபரேஷன் பிரம்மா திட்டத்தின் கீழ் மியான்மருக்கு 450 டன்னுக்கும் கூடுதலான நிவாரணப் பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
5. ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ----*

**[]<<<>>>[]**

இந்தியா — சிலி இடையேயான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இந்தியா ஆர்வம் கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

லத்தின் அமெரிக்காவில் இந்தியாவின் முக்கிய நட்பு நாடான சிலி அண்டார்ட்டிகாவின் நுழை வாயிலாக திகழ்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ள சிலி நாட்டு அதிபர் திரு **Gabriel Boric Font**-வுடன், திரு நரேந்திரமோடி இருதரப்பு பேச்சுக்களை நடத்தினார்.

இதனையடுத்து திரு நரேந்திரமோடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வரும் ஆண்டுகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான புதிய திட்டங்கள் குறித்து தாங்கள் ஆலோசித்ததாக் கூறியுள்ளார்.

பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இருதரப்புக்கும் பயன்தரத்தக்க புதிய முயற்சிகள் குறித்து ஆய்வு செய்வது என இந்த பேச்சுவார்த்தைகளின்போது முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இருதரப்பு வர்த்தகத்தை மேலும் ஊக்குவிப்பது குறித்தும், விவாதிக்கப்பட்டதாக பிரதமர் கூறியுள்ளார்.

வேளாண் துறையில் ஒத்துழைப்பு மற்றும் உணவு பாதுகாப்பு குறித்தும், மின்னணு, பொது கட்டமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, ரயில்வே விண்வெளி உள்ளிட்ட துறைகளிலும் ஒத்துழைப்புகான வாய்ப்புகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

நவம்பர் நான்காம் தேதியை சிலி நாட்டின் தேசிய யோகா தினமாக அறிவிக்கப்பட்டதை வரவேற்பதாகவும் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய சிலி அதிபர் திரு போரிக், சுகாதாரம், தொழில்நுட்பம், புதுமை கண்டுபிடிப்புகள் உள்ளிட்டவற்றில் இந்தியாவின்நம்பிக்கை மிகுந்த நட்பு நாடாக சிலி செயல்படும் என்று கூறினார்.

இந்தியாவின் **Shoot in chile** காணொலி நிகழ்ச்சி திட்டத்தை வரவேற்பதாகக் கூறிய அவர், இது இரு நாடுகளுக்கும் இடையேயான கலாச்சார பரிமாற்றத்திற்கு பாலமாக அமையும் என்றார்.

இந்தியாவுக்கும் - சிலிக்கும் இடையே புதிய துறைகளில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை வரவேற்பதாகவும் சிலி அதிபர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

இந்தியா — சிலி இடையேயான கலாச்சார ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டின் கலை கலாச்சார பண்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி கரோலினா **Arredondo**-வை சந்தித்து தாம் பேச்சு நடத்தியதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

சிலி நாட்டு அதிபருடன் புதுதில்லி வந்துள்ள திருமதி கரோலினாவுடன், கலை பண்பாட்டுத் துறையில் புதிய முயற்சிகளை மேற்கொள்வது குறித்தும், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் ஆலோசனை நடத்தியதாக அவர் தமது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

இந்த சந்திப்பின்போது சிலி நாட்டு குழுவினருடன் தமது தலைமையில் இந்திய குழுவினரும் கலந்து கொண்டதாக திரு முருகன் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி கடந்த நிதி ஆண்டில் 23 ஆயிரத்து 600 கோடி ரூபாயை எட்டியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், முந்தைய ஆண்டைவிட 14 சதவீதம் உற்பத்தி அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத்துறை நிறுவனங்களின் பாதுகாப்பு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி 43 சதவீதம் அதிகரித்து எட்டாயிரத்து 400 கோடி ரூபாயை எட்டியுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.,

இதனிடையே பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், பாதுகாப்பு தளவாடங்களின் ஏற்றுமதி 2029-ஆம் ஆண்டுக்குள் 50 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

விமான உதிரி பாகங்கள் பாதுகாப்பு மசோதா இன்று மாநிலங்களவையில் நிறைவேறியது.

விமான உதிரிப்பாகங்கள் உற்பத்தியில் ஈடுபடும் சர்வதேச முதலீட்டாளர்களின் நலன்களை பாதுகாக்கவும் சிவில் விமான போக்குவரத்து தலைமை இயக்குநரின் அதிகாரம் மற்றும் விமான உதிரி பாகங்கள் உற்பத்தித்துறையில் மாற்றங்களை கொண்டுவருவதற்கும் இந்த மசோதா வழிவகை செய்கிறது.

இந்த மசோதா மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்து பேசிய சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு, சிவில் விமான போக்குவரத்து உலகிலேயே மூன்றாவது பெரிய சந்தையாக திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

கடந்த பத்து ஆண்டுகளில் இந்த துறை அபரிமிதமான வளர்ச்சியை கண்டுள்ளதாக அவர் கூறினார்.

2014-ஆம் ஆண்டு 60 புள்ளி ஏழு மில்லியனாக இருந்த உள்நாட்டு பயணியர் போக்குவரத்து தற்போது 161 மில்லியனாக அதிகரித்துள்ளது என்று தெரிவித்தார்.

சர்வதேச விமான பயணியர் போக்குவரத்தும் 43 மில்லியனிலிருந்து 66 மில்லியனாக உயர்ந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் விமான நிலையங்கள் மற்றும் விமானங்களின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்துள்ளது என்று அவர் கூறினார்.

பத்து ஆண்டுகளுக்கு முன் 355 விமானங்கள் மட்டுமே இயக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது 840 விமானங்கள் இயக்கப்டுவதாக அவர் தெரிவித்தார்.

சாதாரண மக்களும் விமான போக்குவரத்தை பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு நரேந்திரமோடி உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு சிவில் விமான போக்குவரத்துத் துறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தி உள்ளதாகவும் திரு ராம்மோகன் நாயுடு கூறினார்,

முன்னதாக இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு சந்தோஷ்குமார், சிவில் விமான போக்குவரத்துத் துறைக்கான படஜெட் ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

விமான பயணிகளின் பாதுகாப்பு மற்றும் வசதியான போக்குவரத்தை அரசு உறுதி செய்ய வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மியான்மரில் நேரிட்ட பூகம்பத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை இரண்டாயிரத்து 719-ஆக அதிகரித்துள்ளது.

அந்நாட்டின் ராணுவ தலைமை தளபதி **Min aung** தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், உயிரிழந்தோர் எண்ணிக்கை மூவாயிரத்துக்கும் கூடுதலாக அதிகரிக்கக்கூடும் என்று தெரிவித்தார்.

காயமடைந்து நான்காயிரத்து 500-க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருவதாகவும் 440 பேரை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளிலும் மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

ஆபரேஷன் பிரம்மா திட்டத்தின் கீழ் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட அத்தியாவசிய பொருட்கள் மற்றும் மருந்துகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்திய கடற்படை கப்பல்கள் நிவாரணப் பொருட்களுடன் யாங்கூன் சென்றடைந்துள்ளன.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் ஆபரேஷன் பிரம்மா திட்டத்தின் கீழ் 16 டன் அத்தியாவசியப் பொருட்களுடன் இந்திய விமானப்படை விமானம் புதுதில்லியிலிருந்து புறப்பட்டு மியான்மரின் மாண்டலே பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.,

அரிசி உள்ளிட்ட உணவுப்பொருட்கள் இதில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கடல் மார்க்கமாகவும் இந்திய கடற்படை கப்பல் மூலம் விசாகப்பட்டினத்திலிருந்து 442 டன் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாண்டலயாவில் இந்திய ராணுவத்தின் சார்பில் தற்காலிக மருத்துவமனை அமைக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட தாய்லாந்தில் மேலும் 20 பேர் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.,

தலைநகர் பாங்காக்கில் உள்ள ஸ்கை-ஸ்கிராபர் கட்டிடத்திலிருந்து உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்புப் படையினர் மீட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

அமெரிக்காவின் ஒன்று புள்ளி இரண்டு ட்ரில்லியன் டாலர் வர்த்தக பற்றாக்குறையை போக்கும் நோக்கில் அமெரிக்க பொருட்களுக்கு கூடுதல் வரி விதிக்கப்படும் என்று அந்நாட்டு அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் அறிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்ற இப்போட்டியில் ஆடவர் 92 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் தீபக் புனியாவும், 61 கிலோ எடைப்பிரிவில் உதித்-ம் வெள்ளப்பதக்கம் வென்றனர்.

125 கிலோ எடைப்பிரிவில் தினேஷ் வெண்கலப்பதக்கத்தை வென்றார்.

இப்போட்டியில் இந்தியா ஒரு தங்கம், மூன்று வெள்ளி, ஆறு வெண்கலம் என மொத்தம் பத்து பதக்கங்களை வென்றுள்ளது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் லக்னோ – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பஞ்சாப் முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.